# சீறத்துன்னபி صلى الله عليه وسلم

## நாள் 8



# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: ஜைது இப்னு ஹாரிதாவின் வரலாறு
- பகுதி 2: நபி (ஸல்) அவர்கள் மற்றும் ஜைது இப்னு ஹாரிதா
- பகுதி 3: வஹீயின் ஆரம்பம் - இக்ரா
- பகுதி 4: கதீஜா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு ஆறுதல் கூறியது
- பகுதி 5: இரண்டாவது வஹீ

## பகுதி 1: ஜைது இப்னு ஹாரிதாவின் வரலாறு

- நபித்துவத்திற்கு முன் நடந்த நிகழ்ச்சிகளில் நாம் அறியவேண்டிய சில முக்கியமான சம்பவங்களில் ஒன்று, ஜைது இப்னு ஹாரிதாவின் வரலாறு.

- ஜைது யமனைச் சேர்ந்தவர். அவரது தந்தையும், தாயும் யமனில் உள்ள வெவ்வேறு குடியினத்தைச் சேர்ந்தவர்கள்.

- ஒரு நாள் ஜைதின் தாயார் அவரை தனது பெற்றோரின் இடத்திற்கு அழைத்துச் சென்றார். அந்த நேரத்தில் அவரது கணவரின் குடியினத்தவருக்கும், அவரது குடியினத்தவருக்கும் இடையே ஒரு மோதல் வெடித்தது.

- அது ஜாஹிலிய்யாவின் (அறியாமை) காலம். ஜைதின் தாய்வழி தூரத்து உறவினர்கள் மிகவும் கொடூரமான ஒரு செயலைச் செய்தார்கள்.

- ஜைதின் தந்தை எதிரி இனத்தைச் சேர்ந்தவர் என்பதால், ஜைதை அவரது தாயிடமிருந்து கடத்திவந்து அடிமையாக விற்றுவிட்டனர்.

- ஜைது சுமார் 7 அல்லது 8 வயதுடையவராக இருந்தபோது மக்காவிற்கு அருகிலுள்ள ஒரு வியாபார கண்காட்சியில் அடிமையாக விற்கப்பட்டார். இது ஹஜ் காலம் முடிந்தவுடன் நிகழ்ந்தது.

- மக்காவில் இருந்த கதீஜா (ரலி) தனக்கு வேலை செய்ய ஒரு அடிமையைத் தேடிக்கொண்டிருந்தார். அதற்காக அவர் ஒரு அடிமையை வாங்குவதற்காக தனது உறவினர்களில் ஒருவரை கண்காட்சிக்கு அனுப்பினார்.

- கதீஜா (ரலி) அவர்களுக்கு ஜைது அடிமையாக விற்கப்பட்டார். கதீஜா (ரலி) அவர்கள், நபி (ஸல்) அவர்களை மணந்தபோது, ஜைதை அவர்களுக்கு அடிமையாக பரிசளித்தார்.

- இதற்கிடையில், ஜைதின் தந்தை தனது மகனை மும்முரமாக தேடிக்கொண்டிருந்தார். மேலும் அவர் காணாமல் போன தனது மகனைப் பற்றிய செய்தியை எல்லா இடங்களிலும் பரப்பினார்.

- பல ஆண்டுகளுக்குப் பிறகு, ஹஜ் நேரத்தில், ஜைதின் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர், இந்தச் சிறுவனிடம் அவரது கோத்திரத்தைப் போன்ற அம்சங்கள் இருப்பதை அடையாளம் கண்டுகொண்டார். சில கேள்விகளைக்

கேட்டதன் மூலம், அவர்கள் தேடும் ஜைதுதான் இவர் என்பதை அவர் உறுதி செய்துகொண்டார்.

- இதுபற்றி ஜைதின் தந்தைக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் தன்னிடம் இருந்த செல்வங்கள் அனைத்தையும் சேகரித்து, தனது சகோதரருடன் மக்காவுக்குப் புறப்பட்டார்.

- அவர்கள் நபி (ஸல்) அவர்களை சந்தித்து, அவர்களுடைய பரம்பரை, அவர்களது நம்பகத்தன்மை மற்றும் அவர்களது நேர்மையைப் பற்றி பாராட்டினார்கள். பின்பு அவர்கள், தங்கள் மகனைத் திரும்ப அழைத்துச் செல்ல வந்திருப்பதாகவும், நபி (ஸல்) விரும்பும் மீட்புத் தொகையை வழங்க தயாராக இருப்பதாகவும், தங்களிடம் கருணை காட்டுமாறும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள்.

- நபி (ஸல்) அவர்கள், ''இந்த விஷயத்தை ஜைதிடமே விட்டு விடுகிறேன்'' என்று பதிலளித்தார்கள். மேலும், ''அவர் உங்களைத் தேர்ந்தெடுத்தால், நான் அவரை மீட்புப் பணமில்லாமல் உங்களுடன் அனுப்பிவிடுகிறேன். ஆனால், அவர் என்னைத் தேர்ந்தெடுத்தால், என்னிடம் வந்த ஒருவரை என்னால் ஒருபோதும் திரும்பி அனுப்ப முடியாது'', என்றும் கூறினார்கள்.

- இதைக்கேட்ட ஜைதின் தந்தையும், அவரது சகோதரரும் மகிழ்ச்சியடைந்து, இந்த முடிவுக்கு ஒப்புக்கொண்டனர். பின்பு, நபி (ஸல்) அவர்கள் ஜைதை அழைத்தார்கள்.

## பகுதி 2: நபி (ஸல்) அவர்கள் மற்றும் ஜைது இப்னு ஹாரிதா

- அப்போது ஜைதுக்கு சுமார் 25 வயது இருக்கும். அவர் கதீஜா (ரலி) அவர்களின் வீட்டில் 7 முதல் 8 ஆண்டுகள் வரையிலும் மற்றும் முஹம்மது (ஸல்) அவர்களுடன் மேலும் 10 ஆண்டுகளும் கழித்திருந்தார்.

- நபி (ஸல்) அவர்கள் ஜைதிடம், ''இந்த மனிதர்களை உனக்கு அடையாளம் தெரிகிறதா?'', என்று கேட்டார்கள். ஜைது உடனே , ''இவர்கள் எனது தந்தையும், மாமாவும் ஆவார்கள்'' என்று பதிலளித்தார்.

- பின்பு நபி (ஸல்) அவர்கள் ஜைதிடம், ''இவர்கள் உன்னை திரும்ப அழைத்துச் செல்ல வந்திருக்கிறார்கள். இந்த விஷயத்தில் முடிவெடுப்பதை உன்னிடமே விட்டுவிடுகிறேன்'', என்றார்கள்.

- ‘‘அதாவது எங்கள் இருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்: நீ உனது தந்தை மற்றும் மாமாவுடன் திரும்பிச் செல்லலாம்; அல்லது நீ விரும்பினால் என்னுடன் இருக்கலாம்’’.

- உடனே ஜைது, ‘‘உங்களைத் தவிர யாரையும் என்னால் தேர்ந்தெடுக்க முடியாது; ஏனென்றால், நீங்கள் எனக்கு என் தந்தை மற்றும் மாமாவை விட மேலானவர்’’ என்று எந்தவித தயக்கமுமில்லாமல் பதிலளித்தார்.

- ஜைதின் தந்தையால் இதை நம்ப முடியவில்லை. உடனே அவர், ‘‘உனக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா? நீ ஒரு சுதந்திரமான நபராக நம் வீட்டிற்கு வருவதை விட்டுவிட்டு, இங்கு அடிமையாக இருப்பதைத் தேர்வு செய்கிறாயே!’’ என்று கூறினார்.

- ‘‘நபி (ஸல்) அவர்கள் என்னை நேசித்த விதம் மற்றும் என்னை நடத்தும் விதம், இவற்றை வைத்து பார்க்கும்போது, அவர்களை விட யாரையும் என்னால் தேர்வு செய்ய முடியாது’’, என்று ஜைது பதில் கூறினார்.

- இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் ஜைதின் கையைப் பிடித்துக் கொண்டு நேராக கஃபாவுக்குச் சென்றார்கள்.

- அங்கு மக்களிடம், ‘‘மக்காவின் மக்களே! இனிமேல் ஜைது ஒரு சுதந்திரமான மனிதர். நான் அவரை எனது மகனாக ஏற்றுக்கொண்டேன்’’, என பகிரங்கமாக அறிவித்தார்கள். அன்றிலிருந்து அவர் ‘ஜைது பின் முஹம்மது’ என்று அழைக்கப்பட்டார்.

- இதன் மூலம், ஜைது பின் முஹம்மது என்ற பட்டத்துடன் அனைவரும் அவரை நபி (ஸல்) அவர்களின் மகனாக அங்கீகரித்தார்கள். இந்த நிலை, அல்லாஹ் தனது அல்குர்ஆனில், தங்களது வளர்ப்பு மகன்களை அவர்களின் தந்தையின் பெயரைச் சொல்லி அழைக்கச் சொன்னது வரை நீடித்தது. – ஸூரா அல்அஹ்சாப் (33:5)

- அதன்பின் அவரது பெயர் ஜைது இப்னு ஹாரிதா என மாற்றப்பட்டது.

- மேலும் அல்குர்ஆனில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஒரே சஹாபா ஜைது மட்டும்தான். – ஸூரா அல்அஹ்சாப் (33:37)

- நபி (ஸல்) அவர்கள் ஜைதை சுமார் 10 போர் பயணங்களுக்கு அனுப்பி

வைத்தார்கள். மேலும் அவர் அதில் தளபதியாக இருந்தார். முஸ்லீம்களுக்கும் ரோமானியர்களுக்கும் இடையே நடந்த முஅத்தா போரில் அவர் வீரமரணம் அடைந்தார். அப்போரில் அவர் முஸ்லீம் இராணுவத்தின் முதல் தளபதியாக பணியாற்றினார்.

## பகுதி 3: வஹீயின் ஆரம்பம் - இக்ரா

- நபி (ஸல்) அவர்களுக்கு 40 வயது இருக்கும் பொழுது, அடிக்கடி ஹீரா மலையின் குகையில் தனிமையில் இருப்பதை வழக்கப்படுத்திக் கொண்டார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் குகைக்கு உணவு மற்றும் தண்ணீரை எடுத்துச் சென்று பல இரவுகள் அங்கேயே தங்கி சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.



- உணவும் தண்ணீரும் தீர்ந்துபோகும் போதெல்லாம், வீட்டிற்கு வந்து, கதீஜா (ரலி) அவர்களுடன் சேர்ந்து குடும்ப விஷயங்களைக் கவனித்து விட்டு, மீண்டும் ஹீரா மலைக்குத் திரும்புவார்கள்.

- இந்த நாட்களில் சில அசாதாரணமான விஷயங்கள் நடக்க ஆரம்பித்தன. இது ஸஹீஹ் முஸ்லிமில் உள்ள ஒரு ஹதீஸில் விவரிக்கப்பட்டுள்ளது.

- அவர்கள் ஹீரா மலைக்கு செல்லும்பொழுது 'ஸலாம்' கூறப்படுவதைக் கேட்பார்கள். ஆனால் அருகில் யாரையும் பார்க்க முடியவில்லை. அது அவர்களது பாதையில் உள்ள பாறை மற்றும் கற்களில் இருந்து வருகிறது

என்று எண்ணிக்கொள்வார்கள்.

- முதல் வஹீ  வருவதற்கு சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பிருந்து, நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு இரவிலும் ஒரு கனவை காண்பார்கள்; அது மறுநாள் நனவாகும்.

- ரமலான் மாதத்தில், ஒரு திங்கட்கிழமையன்று, நபி (ஸல்) அவர்கள் ஹீரா குகையில் இருந்தபோது,  வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, ‘‘ஓதுங்கள்’’ என்று கூறினார்.

- நபி (ஸல்) அவர்கள், ‘‘எனக்கு படிக்கத் தெரியாதே!’’ என்று பதிலுரைத்தார்கள்.

- பின்னர் ஜிப்ரீல் (அலை), நபி (ஸல்) அவர்களைப் பிடித்து மிகவும் இறுக்கமாக கட்டி க்கொண்டார்கள். அதனால் நபி (ஸல்) அவர்கள் தனது சக்தியை இழந்ததைப் போன்று உணர்ந்தார்கள்.

- பின்னர் ஜிப்ரீல் (அலை) மீண்டும் ‘‘ஓதுங்கள்’’ என்று கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள் ‘‘எனக்கு படிக்கத் தெரியாதே!’’ என்று பதிலளித்தார்கள்.

- ஜிப்ரீல் (அலை) அதே வீரியத்துடன்  மீண்டும் நபி (ஸல்) அவர்களைப் பிடித்து மிகவும் இறுக்கமாக கட்டிக்கொண்டார்கள். இம்முறை நபி (ஸல்) அவர்கள் தனது உயிர் போய்விடும் என நினைத்தார்கள்.



- ஜிப்ரீல் (அலை) மூன்றாவது முறையாக நபி (ஸல்) அவர்களைப் பிடித்து

மிகவும் இறுக்கமாகப் பிடித்தார்கள். அந்த இறுக்கத்தால் தான் இறந்துவிடப் போகிறோம் என்று நபிகள் உணர்ந்தார்கள். மேலும் ஜிப்ரீல் (அலை) ''ஓதுங்கள்'' என்று மீண்டும் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''நான் எதை ஓத வேண்டும்'' என்று கேட்டார்கள்.

- பின்பு ஜிப்ரீல் (அலை) ஓதினார்கள்: ''(யாவற்றையும்) படைத்த உம்முடைய இறைவனின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக! ''அலக்'' என்ற இரத்தக்கட்டியிலிருந்து மனிதனை படைத்தான். ஓதுவீராக! உம் இறைவன் மாபெரும் கொடையாளி. அவனே எழுது கோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான்''. – ஸூரத்துல் அலஃக் (96:1-5)

- நபி (ஸல்) அவர்கள் பயத்தில் நடுங்கிய நிலையில் ஜிப்ரீல் (அலை) கூறிய வசனங்களைத் திரும்பச் சொன்னார்கள்.

- இந்த நிகழ்வுக்குப் பிறகு, நபி (ஸல்) அவர்கள் நெஞ்சம் படபடக்க ஹீரா மலையிலிருந்து வேகமாக இறங்கி, கதீஜா (ரலி) அவர்களிடம் ஓடி வந்தார்கள். அவர்கள் வீட்டிற்குள் நுழைந்ததும், ''என்னை போர்த்திவிடுங்கள்!, என்னை போர்த்திவிடுங்கள்!'' என்று கூச்சலிட்டார்கள்.

## பகுதி 4: கதீஜா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு ஆறுதல் கூறியது

- நபி (ஸல்) அவர்களை அமைதிப்படுத்திவிட்டு கதீஜா (ரலி) 'என்ன நடந்தது?' என்று கேட்க, நபி (ஸல்) அவர்கள் முழு சம்பவத்தையும் விளக்கமாக, மிகவும் பயந்த நிலையில் விவரித்தார்கள்.

- கதீஜா (ரலி) அவர்களை ஆறுதல் படுத்திவிட்டு, ''அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் உங்களை ஒருபோதும் அவமானப்படுத்த மாட்டான். நீங்கள் மிகவும் நல்லவர்; உங்கள் குடும்பத்திற்கு நல்லதைச் செய்கிறீர்கள்; நீங்கள் மற்றவர்களின் சுமைகளை ஏற்றுக்கொள்கிறீர்கள்; ஏழைகளுக்கு நீங்கள் உதவுகிறீர்கள்; நீங்கள் விருந்தினர்களை உபசரிப்பவர்; நீங்கள் எல்லா வகையான நன்மைகளையும் செய்கிறீர்கள்'' எனக் கூறினார்கள்.

- பின்னர் அவர்கள், நபி (ஸல்) அவர்களை தனது மூத்த உறவினர் வரகா இப்னு நவ்ஃபலிடம் அழைத்துச் சென்றார்கள். அவர் பல்வேறு நாடுகளுக்குச் சென்று யூத மற்றும் கிறிஸ்தவத்தின் கலவையான ஒரு மதத்தினை

ஏற்றுக்கொண்டவர்.

- நபி (ஸல்) அவர்கள், வானவர் தம்மிடம் வந்ததையும், மற்றும் நடந்த அனைத்தையும் விவரித்து கூறினார்கள்.

- இதனைக் கேட்டபின் வரகா மிகவும் ஆர்வமும், உற்சாகமும் அடைந்தார்.

- பின்னர் அவர், ''மூஸா (அலை) அவர்களிடம் வந்த அதே வானவர்தான் உங்களிடமும் வந்திருக்கிறார்'', என்று விளக்குகிறார். மேலும் அவர், ''நான் ஒரு இளைஞனாக இருந்திருக்க விரும்புகிறேன். அவ்வாறு இருந்திருந்தால், உங்கள் தேசம் உங்களை கேலி செய்யும் போதும், உங்களைத் துன்புறுத்தும்போதும், உங்களை நாட்டைவிட்டு வெளியேற்றும் போதும் நான் உங்களுக்கு உதவ முடியும்''.

- அதைக்கேட்ட நபியவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு, ''என் தேசம் என்னை வெளியேற்றுமா?'' என்று கேட்டார்கள்.

- அதற்கு வரகா, ''ஆம், எந்த நபியும் அவருடைய மக்கள் அவரை கேலி செய்வதிலிருந்தும், துன்புறுத்துவதிலிருந்தும், மற்றும் நாட்டைவிட்டு வெளியேற்றுவதிலிருந்தும் விதிவிலக்காக இருந்ததில்லை'', எனக்கூறினார்.

- இந்த சம்பவத்திற்குப் பிறகு வரகா இப்னு நவ்ஃபல் சிறிது காலம் மட்டுமே வாழ்ந்தார். பின்நாட்களில், மக்கள் நபி (ஸல்) அவர்களிடம் வரகாவைப்பற்றி கேட்டபோது, நபி (ஸல்) அவர்கள், ''சொர்க்கத்தில் தோட்டங்களால் ஆசீர்வதிக்கப்பட்ட நிலையில், அவரை வெள்ளை ஆடைகளுடன் நான் பார்த்தேன்'', என்று கூறினார்கள்.

## பகுதி 5: இரண்டாவது வஹீ

- ஹீரா மலையில் முதல் வஹீக்குப் பிறகு, சிறிது காலத்திற்கு எந்த வஹீயும் வரவில்லை. மேலும் அது நபி (ஸல்) அவர்களுக்கு முதல் வஹீயின் தாக்கத்தை உணர சிறிது கால அவகாசம் கொடுத்தது. மேலும், அவர்களுக்கு அசாதாரணமான நிகழ்வுகள் நடக்கிறது என்பதையும் உணர முடிந்தது. இருப்பினும், நபி (ஸல்) அவர்கள் முந்தைய நிகழ்வுகளைப் பற்றி நினைத்து, மீண்டும் வஹீ ஏன் வரவில்லை என வருந்தி, கவலையாக இருந்தார்கள்.

- ஒரு நாள், அவர்கள் நடந்து செல்லும் போது, அவர்களது பெயர் கூறி

அழைக்கும் சத்தம் கேட்டது. நபி (ஸல்) அவர்கள் இடது, வலது பக்கங்களைப் பார்த்தார்கள். ஆனால் யாரையு ம் காணவில்லை. இறுதியாக மேலே பார்த்தபொழுது, அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களைக் கண்டார்கள்.

🌲 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ''ஹீரா குகையில் நான் பார்த்த அதே வானவரைப் பார்த்தேன். அந்த வானவர் தனது முழு வடிவில் வானங்களுக்கும் பூமிக்கும் இடையே உள்ள இடத்தை ஆக்கிரமித்து இருந்தார்.



🌲 அல்லாஹ் இந்த சம்பவத்தை ஸூரா அந்நஜ்மில் அழகாக விவரிக்கிறான்: ''அவர் உன்னதமான அடிவானத்தில் இருக்கும் நிலையில். பின்னர், அவர் நெருங்கி, இன்னும் அருகே வந்தார். அந்த நெருக்கமானது, வளைந்த வில்லின் இரு முனைகளைப்போல், அல்லது அதினும் நெருக்கமாக இருந்தது''. (53:7-9)

🌲 நபி (ஸல்) அவர்கள் இச்சம்பவத்தை விவரிக்கையில், ''நான் பயத்தில் நடுங்கி மீண்டும் கதீஜாவிடம் விரைந்து சென்று, ''என்னை போர்த்தி விடுங்கள்! என்னை போர்த்திவிடுங்கள்!'' என்று கூறினேன். (ஸஹீஹ் புகாரீ).

🌲 அப்போதுதான் ஜிப்ரீல் (அலை), நபி (ஸல்) அவர்களிடம் வந்து இரண்டாவது வஹீயைக் கொண்டுவந்தார்கள். அது ஸூரா முத்தஸ்ஸிர்ரின் முதல் 7 ஆயத்துகளாகும்.

🌲 (போர்வை) போர்த்திக் கொண்டு இருப்பவரே! நீர் எழுந்து (மக்களுக்கு அச்சமூட்டி) எச்சரிக்கை செய்வீராக! மேலும், உம் இறைவனைப்

பெருமைப்படுத்துவீராக! உம் ஆடைகளைத் தூய்மையாக ஆக்கி வைத்துக் கொள்வீராக! மேலும், அசுத்தமான சிலைகளை வெறுத்து (ஒதுக்கி) விடுவீராக! பிறருக்குக் கொடுப்பதையும் விட அவர்களிடமிருந்து அதிகமாகப் பெறக்கருதி உபகாரம் செய்யாதீர்! இன்னும், உம் இறைவனுக்காகப் பொறுமையுடன் இருப்பீராக! – ஸூரத்துல் முத்தஸ்ஸிர் (74:1-7)

🌲 இந்த சம்பவத்திற்குப் பிறகு, நபி (ஸல்) அவர்களுக்கு வழக்கமானதாகவும், தேவையான இடைவெளியில் வஹீ வந்தவண்ணம் இருந்தது.

---